WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 05

# THEEMPUNAL தீம்புனல்

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:24 | 05.12.2023 செவ்வாய்க்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களிடம் இழப்பீடு கோரி வழக்கு

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோர் பொறுப்பு என உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, எதிர்காலத்தில் அவர்களிடமிருந்து நஷ்டஈடு தொடர்பான வழக்குகளை அகில இலங்கை நுகர்வோர் சங்கம் தாக்கல் செய்யவுள்ளது.

அப்போதைய நிர்வாகமும் அதிகாரிகளும் எடுத்த தவறான பொருளாதார முடிவுகளால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக சட்ட வல்லுநர்கள் ஏற்கெனவே கருத்து தெரிவித்துள்ள நிலையில், அதன்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அகில இலங்கை நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் மிலிந்த பிரேமரத்ன கருத்து தெரிவித்திருந்தார். இந்த வழக்குகளை சிவில் வணிக நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றத்திற்கு ஒதுக்கலாம் என்று சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது என்றார்.



எரிவாயு விபத்தினால் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட மனித மரணங்கள் ஏற்பட்டதாகவும் ஆனால் இன்றும் அரசாங்கம் அதற்கு நீதி வழங்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். முன்னைய ஆட்சிக் காலத்தில் எரிவாயு வெடிப்பு உட்பட பல்வேறு துறைகளில் பல பொருளாதார குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றிற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் எத்தகைய பலனையும் தரவில்லை எனவும் மிலிந்த பிரேமரத்ன மேலும் தெரிவித்தார்.

# ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டுகளை அமெரிக்கா ஆய்வு செய்தது

இலங்கையில் ஒரு கொள்கலன் முனையத்திற்காக தனது கூட்டு நிறுவனத்தை $553 மில்லியன் வரை நீட்டிக்கும் முன், இந்திய பில்லியனர் கௌதம் அதானிக்கு எதிரான கார்ப்பரேட் மோசடி குறித்த குறுகிய விற்பனையாளரான ஹிண்டன்பர்க் ரிசர்ச்சின் குற்றச்சாட்டுகள் பொருந்தாது என்று அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரி கூறினார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அதானி குழுமத்தின் சந்தை மதிப்பிலிருந்து சுமார் 100 பில்லியன் டொலர்களை அழித்த அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஹிண்டன்பர்க் ரிசர்ச் ஒரு மோசமான அறிக்கையின் குற்றச்சாட்டுகள், சர்வதேச வளர்ச்சி நிதிக் கழகம் அல்லது DFC என முன்னணி, மையமாக இருந்தது. அமெரிக்க ஏஜென்சியின் அதிகாரி ஒருவர் Bloomberg இடம் கூறினார்.

அதானியை உள்ளடக்கிய இலங்கை துறைமுக ஒப்பந்தம் ஆசியாவிலேயே அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவில் உள்ள மிகப்பெரிய மற்றும் மிகமுக்கியமான உட்கட்டமைப்பு திட்டங்களில் ஒன்றாகும்.

ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் பெல்ட் அண்ட்ரோடு முன்முயற்சியின் விளைவாக, உலகெங்கிலும் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்பியதன் விளைவாக, பிராந்தியத்தில் வளர்ந்து வரும் சீன செல்வாக்கை எதிர்ப்பதற்கான அமெரிக்க முயற்சிகளுக்குப் பிறகு இது வருகிறது.

அதானி குழுமம் ஹிண்டன்பர்க் அறிக்கையில் இடம்பெற்றுள்ள பங்கு விலைக் கையாளுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. இந்தியாவில் இப்பிரச்சினையில் முறையான ஒழுங்குமுறை விசாரணைகள் மற்றும் நீதிமன்ற விசாரணைகள் எந்தத் தவறான செயலையும் வெளிப்படுத்தவில்லை.

அதானி பங்குகள் தாமதமாக உயர்ந்துள்ளன, மேலும் அதானி போர்ட்ஸ் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலம் லிமிடெட் இந்த ஆண்டு இதுவரை 7.4% அதிகரித்துள்ளது.

# எரிபொருள், மின்சாரத்தின் விலை அடுத்த ஆண்டு உயரும்

துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மேம்பாட்டு வரி (பி.ஏ.எல்) 7.5 சதவீதத்திற்கு முன்பு விதிக்கப்பட்டன. இனி, இந்தப் பொருட்களுக்கு 18 சதவீத வட் வரி விதிக்கப்படும். விரைவில், அடுத்த ஆண்டு முதல் எரிபொருள் இறக்குமதி செய்யும்போது, சுமார் 10.5 சதவீதம் கூடுதல் செலவு ஏற்படும். அப்போது எரிபொருள் விலை நிச்சயம் உயரும், என பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் கலாநிதி அசோக ரன்வல தெரிவித்தார்.

18% வட் காரணமாக 01 ஜனவரி 2014 முதல் எரிபொருள் விலை சுமார் 11 சதவீதம் உயரும் என பெற்றோலிய துறை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கின்றன. பெற்றோலியப் பொருட்களின் விலைகள் மற்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையைப் பாதித்ததால் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எரிபொருளுக்கு வட்டில் இருந்து விலக்கு அளித்தன.

இதேவேளை, இலங்கை அனல் மின் உற்பத்தியில் தங்கியிருப்பதாகவும் எரிபொருளுக்கான வட்காரணமாக மின்சாரத்தின் விலையும் அதிகரிக்கும் எனவும் முன்னாள் அமைச்சரும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அரசு ஐ.எம்.எப் காரணமாக வட்டை உயர்த்தியதாகக் கூறுகிறது. இருப்பினும் தொழில் வல்லுநர்களுக்கு வரி விதிப்பதிலும் மறைமுக வரிகளை அதிகரிப்பதிலும்... (பக்:02)

## எரிபொருள், மின்சாரத்தின் விலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மட்டுமே அது ஆர்வமாக உள்ளது. இரண்டும் ஒட்டு மொத்தமாக நாட்டில் எதிர் மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என ரண வக்க கூறினார்.

# வன்னிக்கு உதவிய சந்நிதியான் ஆச்சிரமம்



சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னி பகுதியிலும் நேற்று பல்வேறு உதவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பனிக்கன் குளம் கிராமத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு அவர்கள் வசித்த வீட்டினைத் திருத்துஞ் செய்வதற்காக உதவித்தொகை வழங்கப்பட்டது. வற்றாப்பளை பிரதேசத்தை சேர்ந்த பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற மாணவி ஒருவருக்கு அவரது அடிப்படை செலவுகளுக்காக நிதி உதவி வழங்கப்பட்டது. வவுனியா-புதியகற்பகபுரம் பிரதேசத்தை சேர்ந்த விசேட தேவைக் குட்பட்ட நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்று சித்தியடைந்த மாணவிக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது.

வவுனியா - ஈச்சங்குளம், கோதண்டர் நொச்சிக்குளம் பிரதேசத்தை சேர்ந்த பார்வையற்ற குடும்பத்தை சேர்ந்த நொச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம்- 09 இல் கல்வி கற்கும் மாணவிக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு வலயத்தை சேர்ந்த வ/பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நிதி வழங்கப்பட்டது. இவ்வுதவிகளை சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.

## ஐஸ் போதைப் பொருளுடன் வியாபாரி ஒருவர் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள அரபாநகர் பிரதேசத்தில் ஐஸ் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வியாபாரி ஒருவரை 9 கிராமும் 09 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று திங்கட்கிழமை (04) இரவு விசேட அதிரடிப் படையினர்கைது செய்து ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் மேற்பார்வையில் வலய கட்டளைத் தளபதி அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் பணிப்பாளர் நெட்டசிங்க, மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் விடவிதனவின் வழிகாட்டலில் பிரகாரம் வாழைச்சேனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கே.ஜி.லக்மால்குமார தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் சம்பவதினமான நேற்று இரவு 11 மணியளவில் அரபாநகர் பகுதி வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் இதன் போது குறித்த வீதிவழியாக வியாபாரத்துக்காக ஐஸ் போதைப் பொருளை எடுத்துச் சென்ற வியாபாரியை மடக்கிப்பிடித்து கைது செய்ததுடன் அவரிடமிருந்து 9 கிராமும் 09 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளைகைப்பற்றினர்.

# டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ் வெளியானது




தேசிய டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ் இன்று (05) உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தலைமையில் இலத்திரனியல் மக்கள் தொகை பதிவேடு வேலைத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய டிஜிட்டல் பிறப்பு சான்றிதழ் வேலைத்திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் துரிதமாக விரிவு படுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

டிஜிட்டல் தொழில் நுட்பத்துடன் சர்வதேச தரத்திற்கமைய இந்த தேசிய பிறப்புச் சான்றிதழில் வழங்கப்படும் இலக்கம் தேசிய அடையாள அட்டை இலக்கங்களாக மாற்றப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குழந்தை பிறக்கும் போதே அடையாள எண் ஒன்றை வழங்க சந்தர்ப்பம் கிடைக்கும் நிலையில் இதனூடாக மக்கள் தொகைப் பதிவேட்டை உருவாக்கவும் முடியும்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தபால் முகவரி வழங்க ஏற்பாடு

மாவத்தகம, முவன் கந்தரப்பர் தோட்டத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர் சமூகத்தினருக்கு 200 வருடங்களின் பின்னர் முதன் முறையாக தபால் முகவரிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று (4) உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அஞ்சல் முகவரி வழங்கும் முதல் நிகழ்வாக இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

மாவத்தகம 'முவன் கந்த' தோட்டத்தைச் சேர்ந்த ஜீவரட்ணம் சுரேஷ் குமார் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா உச்ச நீதி மன்றத்திற்கு இதனைத் தெரிவித்தார். தோட்டத் தொழிலாளர்களுக்கு அஞ்சல் முகவரி வழங்குமாறு அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, ஏ.எச்.எம்.டி நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

மனுதாரரின் சட்டத்தரணி லக்ஷான் டயஸ் விளக்கமளிக்கையில், நாடளாவிய ரீதியிலுள்ள முழு தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கும் தபால் முகவரிகளை வழங்குவதே இந்த மனுவின் நோக்கமாகும். இவ்வாறான ஒரு விரிவான பணிக்கு தேவையான கால அவகாசத்தை அவர் அங்கீகரித்ததோடு, தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டினார்.

நாடளாவிய ரீதியிலுள்ள முழு பெருந்தோட்ட சமூகத்திற்கும் தபால் முகவரிகளை வழங்குவது நேரத்தை எடுத்துக்கொள்ளும் வேலைத் திட்டம் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா வலியுறுத்தினார்.

கூடுதல் கால அவகாசம் தேவைப்படுவதால், இப் பணிக்கான தகவல்களை சேகரிக்க அரசு அதிகாரிகள் முனைப்புடன் செயல் பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

200 ஆண்டுகளுக்கும் மேலான பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த முயற்சி ஒரு வரலாற்று தருணத்தை குறிக்கிறது என்று குறிப்பிட்ட பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய அவர்களின் தபால் முகவரிகளுக்கான தேவையை நிவர்த்தி செய்ததில் திருப்தி தெரிவித்தார்.

கோரிய நிவாரணம் நிறைவேறுவதை கருத்தில் கொண்டு, மனு மீதான விசாரணையை ஒத்திவைப்பதாக, தலைமை நீதிபதி, மனுதாரரின் வழக்கறிஞரிடம் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஆறு அல்லது ஒன்பது மாதங்களுக்குப் பிறகு முன்னேற்றம் குறித்து மனுதாரர் விசாரிக்க விரும்பினால், மனுவை மீண்டும் நீதிமன்றத்தில் கொண்டு வந்து நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்த புதுப்பிப்பைப் பெற அவர்களுக்கு விருப்பம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# வருடாந்த கொண்டாட்டமான டெங்கு எதிர்ப்பு ஏற்பாடு

இலங்கையில் அதிகரித்து வரும் டெங்கு நிலைமைக்கு பதிலளிக்கும் வகையில் விரிவான பூஜ்ஜிய டெங்கு பிரச்சாரத்தை அரசாங்கம் இன்று ஆரம்பிக்கவுள்ளது. நுளம்புகளால் பரவும் இந்த நோயின் பரவலைத் தடுக்கும் நோக்கில் பயனுள்ள நடவடிக்கைகளை ஒத்துழைப்புடன் உருவாக்கி செயல்படுத்த பல்வேறு பங்குதாரர்களுடன் ஒரு கூட்டம் கூட்டப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, டெங்கு அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக பல அமைச்சுக்களை உடனடியாகத் திரட்டியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சுகாதாரம், கல்வி மற்றும் சுற்றுலா அமைச்சகங்களின் செயலாளர்கள், டெங்கு சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களுடன், ஆயுதப்படை மற்றும் காவல்துறையினரின் முழு ஆதரவுடன் இந்த முயற்சியை முன்னெடுப்பார்கள்.

இந்த அமைச்சகங்களின் கீழ் உள்ள தொடர்புடைய நிறுவனங்களின் கூட்டு முயற்சிகள் வளங்களை மிகவும் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் பயனுள்ள பயன்பாட்டில் விளைவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நடவடிக்கைக்கான ஒருங்கிணைப்புப் பொறுப்புகளை ஜனாதிபதியின் தலைமை அதிகாரி மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது பெய்து வரும் மழையினால் டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டெங்கு ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வும் சிரமதானமும் திருவிழாபோல் வருடாந்தம் நடைபெறுகிறது. டெங்கு நோய் ஒழிந்ததாகத் தெரியவில்லை. பிளாஸ்ரிக், ஷொப்பிங்பக், ஒரு நாள் கப், லஞ்சீற் போன்றவற்றை ஆங்காங்கே வீசிவிட்டு டெங்கை இல்லாமல் செய்ய முடியாது. குப்பைகளையும் கழிவுகளையும் ஷொப்பிங் பாக்கில் கட்டி வீதியில் வீசிவிட்டால் டெங்கை இல்லாமல் செய்ய முடியாது.

சுத்தம், சுகாதாரம் என்பது டெங்கு நோய் தாக்குவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட வேண்டும். நகரங்களில் மட்டுமல்லலாது, கிராமங்களிலும் சரியான பொறிமுறையில் குப்பைகள் அகற்றப்படுவதில்லை. வைத்தியசாலைக் கழிவுகள் கண்டபடி கொட்டப்படுவதாகவும் சமூகவலைத்தளங்களில் படங்களுடன் செய்திகள் வருகின்றன. அவற்றை மிகக் கவனமாக அகற்ற வேண்டும்.

முதலில் நுளம்புகள் பரவக்கூடிய பகுதிகளை தூய்மைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் தங்கியிருக்கும். பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பிளாஸ்ரிக், டயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடங்களில் டெங்கு நோய் அதிகரிக்கும். முடிந்தளவிற்கு மேற்படி பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதேபோல் நுளம்புக் கடியிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

டெங்கு நோய்க்கு இலக்கானவர்கள் மற்றையவர்களுக்கு பரவாமலிருக்கும் வகையில் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்புப்பெற வேண்டியது அவசியமாகும். அதற்காக உடலை முழுமையாக மறைக்கும் உடைகளைப்பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான பூச்சி விரட்டித் திரவியங்கள் ஊடாகவும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெறமுடியும். எவ்வாறாயினும் இந்த முறைமைகள் 100 சதவீதம் பலன் தருபவை அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

பிரதேச சபைகள், நகர சபைகள், பொது சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதாரப்பிரிவுகள், பாதுகாப்புப்பிரிவுகளின் பங்களிப்புடன் நுளம்பு பெருகும் இடங்களை தூய்மைப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. டெங்கு நோய் அதிகளவில் பரவும் மாகாணங்களை மையப்படுத்திய விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீர் நிரம்பிய பாத்திரங்களில் நீரை அகற்றினாலும் குடம்பிகள் தங்கியிருக்கக்கூடும். எனவே, நீர் நிரம்பாத வகையில் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். பொதுவாக ஐந்து அல்லது ஆறு நாட்கள் மாத்திரமே நுளம்புகள் உயிர்வாழும். அதனால் வாராந்தம் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அண்மித்த பகுதிகளை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அதனால் நோயக் கட்டுப்பாட்டினை ஒருவரால் மாத்திரம் செய்துவிட முடியாது. இந்நாட்டில் அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

# காஸா சுரங்கப்பாதையில் கடல் நீரை விட இஸ்ரேல் திட்டம்

காஸாவிலுள்ள சுரங்கப் பாதைகளில் கடல்நீரால் வெள்ளத்தை ஏற்படுத்தி, ஹமாஸ் போராளிகளை வெளியில் இழுக்கும் முயற்சியில் ஈடுபட, அங்கு பெரிய அளவிலான மோட்டார்களை இஸ்ரேல் பொருத்தியுள்ளதாக, அமெரிக்க அதிகாரிகளின் தகவலை மேற்கோள்காட்டி, வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

அல்-ஷாதி அகதிகள் முகாமின் வடக்கே, ஒரு மணி நேரத்தில் பல ஆயிரக்கணக்கான கியூபிக் லீற்றர் தண்ணீரை சுரங்கங்களுக்குள் செலுத்தும் வகையில், கடந்த நவம்பர் மாதமே இஸ்ரேல் 5 மோட்டார்களை பொருத்திவிட்டதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. அனைத்து பணய கைதிகள் விடுவிக்கப்படும் முன்னரே, இத்திட்டத்தை இஸ்ரேல் செயல்படுத்துமா? என்பது இன்னும் தெரியவில்லை என அந்தச் செய்தி கூறுகிறது.

# அரபு நாடுகளுக்குச் செல்கிறார் புட்டின்

ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இந்த வாரம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் திங்களன்று செய்தி வெளியிட்டுள்ளன.

ஷாட் டெலிகிராம் சனல், ரஷ்ய செய்தி இணையத்தளமான லைஃப் ஆகியவற்றை மேற்கோள் காட்டி, புட்டின் இரு நாடுகளுக்கும் பணிபுரியும் பயணமாகச் செல்வார், அப்போது அவர் சவூதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானை சந்திப்பார் என்று ரஷ்ய அரசு செய்தி நிறுவனங்களான டாஸ் மற்றும் ரியா நோவோஸ்டி தெரிவித்தனர்.

புட்டின் சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்வார், அங்கு அவரது “முதன்மையாக பட்டத்து இளவரசருடன் பேச்சுவார்த்தைகள் இருக்கும்”, ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு பயணம் செய்த சிறிது நேரத்திலேயே, ஜனாதிபதி உதவியாளர் யூரி உஷாகோவ் கூறியதாக ஷாட் டெலிகிராம் சனல் தெரிவித்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தற்போது ஐ.நா காலநிலை மாற்ற மாநாட்டை நடத்துகிறது, ஆனால் புட்டின் கலந்துகொள்வாரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

# காலிஸ்தான் இயக்கத்தின் தலைவர் காலமானார்

தடை செய்யப்பட்ட காலிஸ்தான் பிரிவினைவாத இயக்கத்தின் தலைவரும் இந்தியாவால் தீவிர



வாதி என அறிவிக்கப்பட்டவருமான லக்பீர் சிங் ரோட் (72), பாகிஸ்தானில் காலமானதாக தகவல் வெளியாகியுள்ளது.

தடை செய்யப்பட்ட காலிஸ்தான் விடுதலை படை மற்றும் சர்வதேச சீக்கிய இளைஞர் கூட்டமைப்பின் தலைவரான லக்பீர் சிங், இந்தியாவால் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ், தீவிரவாதியாக அறிவிக்கப்பட்ட பின்னர், பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தார்.

1984 இல் பொற்கோயிலுக்குள் கொல்லப்பட்ட ஜர்னைல் சிங் பிந்தரன்வாலேவின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

லக்பீர் சிங் ரோட்டின் சகோதரரும் முன்னாள் அகல் தக்த் ஜதேதாருமான ஜஸ்பீர் சிங் ரோட், லக்பீர் சிங் காலமானதை உறுதி செய்தார். மேலும், லக்பீர் சிங்கின் இறுதிச் சடங்குகள் நேற்று முடிந்ததாகவும் தெரிவித்தார்.

# 24 மணித்தியாலயத்தில் 99 பார்களில் குடித்து சாதனை

உலக சாதனைகளை பட்டியலிடும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் விதவிதமாக எத்தனையோ சாதனைகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் சிலரின் சாதனைகள் வினோதமாகவும் விசித்திரமாகவும் இருக்கும்.

அப்படி ஒரு சாதனையை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நண்பர்கள் இரண்டு பேர் செய்திருக்கிறார்கள். சிட்னியைச் சேர்ந்த ஹாரி கூரோஸ் (வயது 26), அவரது நண்பர் ஜேக் லாய்டர் டன் (வயது 26) ஆகியோர் 24 மணி நேரத்தில் 99 பார்களில் சென்று குடித்துள்ளனர். இதற்காக 1500 அவுஸ்திரேலிய டொலர் செலவு செய்துள்ளனர்.

இதன்மூலம் இவர்கள் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர். கடந்த ஆண்டு தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஹென்றிச் டி வில்லியர்ஸ் என்பவர் ஒரே நாளில் 78 பார்களில் குடித்ததே முந்தைய சாதனையாக இருந்தது. அதை ஹாரி கூரோஸ் - ஜேக் லாய்டர்டன் நண்



பர்கள் முறியடித்திருப்பதாக கின்னஸ் உலக சாதனை அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹாரி கூரோஸ்- ஜேக் லாய்டர்டன் இருவரும் ஒரே நாளில் 100 பார்களுக்குச் சென்று குடித்து கின்னஸ் சாதனை படைக்கத் திட்டமிட்டிருந்தனர்.

# மாவீரர் நினைவேந்தலில் கைதானவர்களுக்கு 18 வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு தரவை மாவீரர் இல்லத்தில் நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிமன்ற நீதவான் நேற்று திங்கட்கிழமை (4) உத்தரவிட்டார்.

சந்திவெளியைச் சேர்ந்த மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டாளரும் முன்னாள் புலிகள் அமைப்பைச் சேர்ந்த நிதர்சன் என்றழைக்கப்படும் சின்னத்தம்பி காஞ்சிநிதி, ஒலிபெருக்கி உரிமையாளரான 43 வயதுடைய பிரான்சிஸ் அன்ரனி நியூட்டன், அவரது மகனான 19 வயதுடைய நியூட்டன் சதுர்சன், வாகனசாரதியான 33 வயதுடைய சண்முகநாதன் நவஜீவன் ஆகிய 4 பேரையும் தடைசெய்யப்பட்ட புலிகளின் பாடல் ஒலிபரப்பு செய்தமை, பெயர் பொறித்த பனர் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டின் கீழ் பயங்கரவாத தடைச்சட்டத்தில் வாழைச்சேனை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரையும் நவம்பர் 28 நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை டிசம்பர் 4 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்கப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# நான்கு மாணவர்களுக்கு வகுப்புத் தடை

களனி பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தாக்கிய சம்பவத்தில் தொடர்புடைய நான்கு மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, களனிப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அதன் நிர்வாகம் நேற்று (04) நடவடிக்கை எடுத்திருந்தது. களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனையவை நேற்று பிற்பகல் 2 மணி முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்படும் என களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

# இராணுவத் தளபதிகளின் உணவுச் செலவு செய்தி போலியானது

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியின் செயற்பாடுகளை பார்வையிட வந்த இராணுவ வீரர்கள் குழுவிற்கு உபசரிப்பதற்காக பெருமளவு பணம் செலவிடப்பட்டுள்ளதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பணியாளர்கள் பாடநெறியில் வெளிநாடுகளைச் சேர்ந்த 25 அதிகாரிகள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த 123 இராணுவ அதிகாரிகள் உட்பட 148 உயர் இராணுவ அதிகாரிகள் பங்கு பற்றியதாக அமைச்சு விடுத்துள்ள விசேட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச போட்டியில் யாழ்ப்பாண மாணவன் சாதனை



மலேசியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்றது2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மனக்கணித போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுதர்சன் அருணன் என்ற மாணவர் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

CCMM இன் திருநெல்வேலி கிளையில் பயிலும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த மாணவனே இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

80க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து, போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# பேர ஏரியை அழகுபடுத்தும் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க கோரிக்கை



பேர ஏரி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி பணிமனையின் தலைவர் சாகல ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பேர ஏரி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

# போதையில் நின்ற பொலிஸ் விளக்க மறியலில்

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் மது போதையில் விசாரணைக்கு இடையூறு செய்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை (4) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிப்பதற்காக சென்றபோது மது போதையில் நீதிமன்ற விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அவரைக் கைது செய்த பருத்தித்துறை பொலிஸார், நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சந்தேக நபரை இன்று (05) வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் சந்தேக நபருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

# விரக்தியின் உச்சத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் கப்டன் ஜோஸ் பட்லர்




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஒருநாள் கிரிக்கெட் கப்டன் ஜோஸ் பட்லர், ஒருநாள் போட்டிகளில் தன்னால் ஓட்டங்களை எடுக்க முடியாமல் போனது மிகவும் வருத்தமாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 2023 முதல், 13 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள ஜோஸ் பட்லர் இன்னும் 50 ஓட்டங்களைக் கடக்கவில்லை.

கடைசி 8 போட்டிகளில், பட்லரின் ரன் சராசரி 9.75 மட்டுமே. இந்தியாவில் நடந்த உலகக் கோப்பையில் ஓட்டம் எடுக்கப் போராடினார். தவிர, ஞாயிற்றுக் கிழமை (டிச.3) நடைபெற்ற மேற்கு இந்திய அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியிலும் அவர் சோபிக்கவில்லை.

அந்தப் போட்டியில் இங்கிலாந்து 50 ஓவர்களில் 325 ஓட்டங்கள் எடுத்திருந்தபோதும் பட்லர் 13 பந்துகளில் 3 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் தனது மோசமான ஃபார்மைப் பற்றி மனம் திறந்து பேசிய இங்கிலாந்து கப்டன் இது தனக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

தான் பந்தை எப்போதும் நன்றாகவே அடிப்பதாகவும் ஆனால், ரன்களை எடுக்கத் தொடங்கும் சிறிது நேரத்தில் அவுட்டாகி விடுவதாக சுட்டிக்காட்டினார்.

எனினும், விரைவில் மீண்டும் தனது முழு ஃபார்மிற்கு திரும்புவதற்கு கடினமாக உழைக்க வேண்டும் என்றும் அவர் சபதம் செய்துள்ளார்.

# யூரோ 2024 பரிசுத்தொகை அறிவிப்பு



ஜேர்மனியில் 2024 ஆம் ஆண்டு நடைபெறும் யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடும் 24 தேசிய அணிகளுக்கு மொத்த பரிசுத் தொகையாக 331 மில்லியன் யூரோக்கள் ($360 மில்லியன்) வழங்குவதாக யூரோ உதைபந்தாட்ட கூட்டமைப்பு சனிக்கிழமை கூறியது, இது வணிக வருவாயில் சுமார் 2.4 பில்லியன் யூரோக்கள் ($2.61 பில்லியன்) சம்பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யூரோ பரிசு நிதியானது தொற்றுநோயால் தாமதமான யூரோ 2020 உடன் ஒத்துப்போகிறது மற்றும் பெண்கள் யூரோ 2022 இற்கான ரிசு நிதியைவிட 20 மடங்கு அதிகம்.

யூரோ 2024 தலைப்பு வெற்றியாளரின் தேசிய கூட்டமைப்பு தொடக்கக் குழு கட்டத்தில் மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் அதிகபட்சமாக 28.25 மில்லியன் யூரோக்களைப் பெறலாம் என்று ஐரோப்பிய கால்பந்து அமைப்பு போட்டி சமநிலைக்கு முன்னதாக தெரிவித்துள்ளது. ஜூன் 14 ஆம் திகதி தொடங்கும் ஜேர்மனியில் ஒரு மாத காலப் போட்டியில் விளையாட 24 அணிகள் ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் 9.25 மில்லியன் யூரோக்களைப் பெறுகின்றன. கிளப்புகள் தங்கள் வீரர்களை தேசிய அணி கடமைக்கு விடுவிப்பதற்காக மேலும் 240 மில்லியன் யூரோக்களை பகிர்ந்து கொள்ளும். அவர்கள் தேசிய அணிகளுடன் தகுதிபெறும் ஆட்டங்களுக்காகவும் யூரோ 2024 ஆம் ஆண்டிலும் ஒரு வீரருக்கு தினசரி பல ஆயிரம் யூரோக்களைப் பெறுகிறார்கள்.

# மகளிர் உலகக்கிண்ண தகுதிச் சுற்றுக்குத் தயாராகிறது உகண்டா

சர்வதேச மகளிர் ரி20 உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் பங்கேற்கும் 14 பேர் கொண்ட அணியை உகண்டா அறிவித்துள்ளது. என்டபே கிரிக்கெட் ஓவலில் டிசம்பர் 7 முதல் 17 வரை நடைபெறவுள்ள தகுதிச் சுற்றுக்கு முன்னதாக பயிற்சியாளர் லாரன்ஸ் செமடிம்பா அணியை திங்கள் அன்று அறிவித்தார்.

உகண்டா மகளிர் கிரிக்கெட் அணியில் தலைவராக கான்சி அவெகோவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

உகண்டா அணி வீராங்கனைகளின் விபரம் கெவின் அவினோ, ப்ரோஸ்கோவியா அலகோ, ஐரீன் அலுமோ, ஜேனட் எம்பாபாசி, ஈவ்லின் அனிபோ, கான்சி அவெகோ (கப்டன்), பாட்ரிசியா மலேமேகியா, இம்மாகுலேட் நகிசுயி, ஸ்டெபானி நம்பினா, லோர்னா அன்யாயிட், ரீட்டா முசமாலி, எஸ்தர் இலோகு, மலிசா அரிகோட், மலிசா அரிகோட்

பீ பிரிவில் உகண்டா நமீபியா, நைஜீரியா, ருவாண்டா ஆகியவையும் ஏ பிரிவில் ஜிம்பாப்வே, தான் சானியா, போட்ஸ்வானா கென்யா ஆகியவை உள்ளன.

முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த ஆண்டு துபாயில் நடக்கும் உலகளாவிய தகுதிச் சுற்றுக்கு தகுதி பெறும்.




2024 ஆம் ஆண்டு ரி20 மகளிர் உலகக்கிண்ணப் போட்டி பங்களாதேஷில் நடைபெற உள்ளது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 05.12.2023 அன்று வெளியிடப்பட்டது.